Registered as a Newspaper
பக்கங்கள் 06
விலை: ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆடி 16 | [ 31-07-1993 ] | சனிக்கிழமை | ஓசை 163

## யாழ். குடாநாட்டில் 70 சதவீதமான மாணவர்களுக்கு பற்சூத்தை

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களை மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கியபோது எழுபது வீதத்திற்கும் மேலானோர் பற்சூத்தை நோய்க்கு இலக்காகியிருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது. மேலும் இலங்கை முழுவதிலும் யாழ்ப்பாண தமிழ் மக்களிடையே மிகவும் அதிகமாக பற்சூத்தை, முரசுவியாதி, வாய் புற்றுநோய்களால் பாதிப்புற்றவர்களாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சென். ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் பல் வைத்திய சிகிச்சை நிலையங்கள் மாணவர்களுக்காக செயற்படுவதாகவும், மாணவர்கள் இந் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ( வட்டுக்கோட்டை - சித்தன்கேணியில் )

# 'சுப்பர்சொனிக்', 'புக்காரா' விமானங்கள்

# நேற்று மாலை அகோரக் குண்டு வீச்சு!

## ஒருவர் பலி; 9 பேர் படுகாயம் வீடுகள், கால்நடைகள் அழிவு

[நமது நிருபர்]

வட்டுக்கோட்டை – சித்தன்கேணிப் பகுதியில் நேற்றுமாலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான குண்டுவீச்சு விமானங்கள் அகோரத்தாக்குதலை நடத்தின. சுப்பர்சொனிக், புக்காரா ரக விமானங்கள் தனித்தனியாக ஒவ்வொரு தடவை மேற்கொண்ட தாக்குதல்களின் போது மொத்தம் எட்டுக்குண்டுகள் வீசப்பட்டன. இக் கண்மூடித்தனமான தாக்குதலில் ஒரு மாணவன் கொல்லப்பட்டதோடு ஒன்பது பேர் காயமடைந்தனர்.

மேலும், இத்தாக்குதலில் பல வீடுகளும் நாசமாகின. கால்நடைகள் பல கொல்லப்பட்டன.

நேற்று மாலை யாழ்.குடாநாட்டின் வான் பரப்பில் பிரவேசித்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்களில் ஒன்று சித்தன் கேணிப் பகுதியில முதல் தாக்குதலை நடத்தியது.

பிற்பகல் 4-55 மணியளவில் குடியிருப்புக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலின் போது குடியிருப்பை அண்டிய வயலில் நின்ற ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர். இத்தாக்குதலின் போது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

இதேவேளை மற்றொரு சுப்பர் சொனிக் விமானம் வட்டுக்கோட்டை – மாவடிப் பகுதியில் குடியிருப்புக்கள் மீது ஒரே வேளை இரு குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலில் நால்வர் காயமடைந்தனர். இத்தாக்குதலில் பல வீடுகளும் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து 5.25 மணியளவில் வட்டுக்கோட்டை -சித்தன்கேணிப் பகுதிக்கு விரைந்துவந்த 'புக்காரா' விமானங்கள் இரண்டு இவ்விரு பகுதிகளிலும் தலா இருகுண்டுகளை வீசி தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலின் போது சித்தன்கேணிப்பகுதியில் ஐந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

### புக்காரா தாக்குதலினால் மாணவன் ஒருவர் பலி

[நமது நிருபர்]

வட்டுக்கோட்டை பகுதியில் சுப்பர்சொனிக் விமானம் நடத்திய தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்துக் கொண்டி...

புக்காரா தாக்குதலின்போது ஏற்பட்ட அதிர்வினால் கொல்லப்பட்டார்.

இவ்வாறு இறந்தவர் நடைபெறவுள்ள க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்கு தோற்றவிரு...

## ஆ.க.வெ. சமரில் வீரச்சாவடைந்த மாவீரர் நினைவு நாள் இன்று

ஆனையிறவு ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்த வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளும் நினைவாலயத் திறப்பு நிகழ்வும் இன்று மாலை 5-00 மணிக்கு கொடிகாமத்தில் நடைபெறும்.

மாலை 5-00மணிக்கு நினைவாலயத் திறப்பு விழாவும் இரவு 7-30 மணிக்கு நினைவுக் கூட்டமும் ஆரம்பமாகவுள்ளன கொடிகாமம் கண்டி வீதியில் அமைந்துள்ள இந்நினைவாலய திறப்பு விழா நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றல், தேசியக் கொடி ஏற்றலைத் தொடர்ந்து நினைவுக் கல்லும், நினைவாலயமும் திறந்து வைக்கப்படும். பின்னர் மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றலுடன் உருவப்படங்களுக்கு மாலை சூடும் நிகழ்வும் இடம் பெறும் பின்னர் உருவப்படங்களுக்கு மாவீரரின் பெற்றோர் மலரிடுவர்.

இரவு 7 30 மணிக்கு ஆரம்பமாகும் நினைவுக் கூட்டத்தில் நினைவுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.


### ஆ. க. வெ. சமரில் வீரச்சாவடைந்தோர் நினைவாலயம்



### வீரச்சாவு



## நினைவாலயம்



இரத்தத்தில் தோய்ந்த புதிய ஒரு புரட்சிகர வரலாறு எமது மண்ணில் எழுதப்படுகின்றது.

எமது நிலத்தின் எமது இனத்தின் விடுதலைக்காக நாம் கொடுக்கின்ற விலை மிகப் பெரியது ஒப்பற்றது.

தியாகங்களால் அர்ப்பணிப்புக்களால் உரமாக்கப்பட்டு, ஆட்டங்காண முடியாத உறுதியுடன் எமது போராட்டம் கட்டிவளர்க்கப்படுகின்றது.

தமிழீழ தேசத்தின் ஆயிரக்கணக்கான புதல்வர்கள் எங்கள் தேசத்தின் நிர்மாணிப்பிற்காக தம்மையே அடிக்கற்களாக்கி புதைந்து கிடக்கின்றனர் வாழ்க்கையை மக்களுக்காக அர்ப்பணித்து மக்களுக்காகவே சாவையும் அணைத்துக் கொள்வதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள், பெருமைப்பட்டார்கள்.

ஆ.க.வெ இராணுவ நடவடிக்கை ஆனையிறவுப் பெருங்களத்தில் நடந்துமுடிந்த வரலாற்றுச் சமர். உலகம் மூக்கில் விரலை வைத்து தமிழீழத்தை வியந்து பார்க்கவைத்த களம்.

''இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள் உண்டு'' என முதல் தடவையாக உலகை பேசவைத்த களம்.

தமிழீழத்தின் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டுள்ள பெரு முள்ளை பிடுங்கி எறிய புலிகள் இயக்கம் பெருமுயற்சி எடுத்த களம்.

சிங்கள தேசத்தின் முப்படைகளினதும் திரண்ட படைகளின் ஒருமித்த தாக்குதலை எதிர்கொண்டு நின்று மரபு வழிச் சமர்புரிந்த முதற்பெரும் களம். ஈராண்டுகளுக்கு முன்பு இதே நாட்களில் அந்த யுத்தம் நடந்துகொண்டிருந்தது.

அந்த வரலாற்று சமரின்போது 599 புலி வீரர்களும், புலிகளுக்கு தோள் கொடுத்து நின்ற 3 துணைப்படை வீரர்களும் தாயக விடுதலைக்காக தமது உயிர்களை ஈந்தார்கள்,

அந்த உவர் நிலத்தில் .... அந்த கடற்கரை மணற்பரப்பில்......... வெட்டவெளிகளில் கிடக்கின்ற பற்றைகளுள்......... அந்த நெடிய பனைகளுக்கடியில்......... தங்கள் உடல்களை சரித்த அந்த விடுதலை வீரர்களின் நினைவுநாள் இன்றாகும்.

அந்த உன்னதமானவர்களின் ஞாபகார்த்தமாக — கொடிகாமம் கண்டி வீதியில் உருவாக்கப்பட்ட நினைவாலயம் இன்று மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதுடன் அந்த மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

எங்கள் அன்புக்கினிய மக்களே! எங்கள் குழந்தைகளாக, எங்கள் உடன்பிறப்புக்களாக, எங்களின் இனிய நண்பர்களாக வாழ்ந்து எங்களின் விடுதலைக்கென்றே சாவையும் ஏற்ற, அந்த வீர மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்த அவர்களின் நினைவாலயத்தின் முன்னால் ஒன்று திரளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## வீரச்சாவு



வீரவேங்கை ரவி
(கலைக்கோன்)

04-07-93 அன்று பிற்பகல் 4-00 மணியளவில் மட்டக்களப்பு சிற்றாறு என்ற இடத்தில் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகள் போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை ரவி/கலைக்கோன் (சீனித்தம்பி சந்திரன், 58ஆம் கட்டை, மூதூர், திருமலை) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் வதனி

யாழ். எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று அதிகாலை 4-00

[6ஆம் பக்கம் பார்க்க]

---

...வேசித்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரு சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானங்களில் ஒன்று சித்தன் கேணிப் பகுதியில முதல் தாக்குதலை நடத்தியது

பிற்பகல் 4-55 மணியளவில் குடியிருப்புக்களை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலின் போது குடியிருப்பை அண்டிய வயலில் நின்ற ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர். இத்தாக்குதலின் வீசப்பட்டன.

இதேவேளை மற்றொரு சுப்பர் சொனிக் விமானம் வட்டுக்கோட்டை — மாவடிப் பகுதியில் குடியிருப்புக்கள் மீது ஒரே வேளை இரு குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தியது. இத் தாக்குதலில் நால்வர் காயமடைந்தனர். இத்தாக்குதலில் பல வீடுகளும் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து 5.25 மணியளவில் வட்டுக்கோட்டை -சித்தன்கேணிப் பகுதிக்கு விமானங்கள் இரண்டு இவ்விரு பகுதிகளிலும் தலா இருகுண்டுகளை வீசி தாக்குதலை நடத்

இத் தாக்குதலின் போது சித்தன்கேணிப்பகுதியில் ஐந்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

# புக்காரா தாக்குதலினால் மாணவன் ஒருவர் பலி

[நமது நிருபர்]

வட்டுக்கோட்டை பகுதியில் சுப்பர்சொனிக்விமானம் நடத்திய தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவர் புக்காரா தாக்குதலின்போது ஏற்பட்ட அதிர்வினால் கொல்லப்பட்டார்.

இவ்வாறு இறந்தவர் நடைபெறவுள்ள க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்கு தோற்றவிருந்த யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் தற்பெருநாதன்

(5ஆம் பக்கம் பார்க்க)

# பிள்ளைகளை அணைத்தபடி வயல் வெளியில் வீழ்ந்தேன்

## காயமடைந்தவர் தகவல்

சுப்பர் சொனிக் குண்டுவீசப் போவதை உணர்ந்துகொண்ட நான் எனது இரு பிள்ளைகளையும் அணைத்துக்கொண்டு வயல்வெளியில் வீழ்ந்தேன் அப்போ அருகில் விழுந்து வெடித்த குண்டுச்சிதறலினால் தலையில் காயமேற்பட்டது.

இவ்வாறு நேற்றுமாலை சித்தன்கேணி வயல் பகுதியில் சிறிலங்காவின் சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி தலையில் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் மலர்தேவி என்பவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவம் பற்றி அவர் விபரிக்கையில்: சித்தன்கேணி கரந்தன் வயல் வெளியூடாக தோட்டத்தில் தேங்காய் பறிப்பதற்காக எனது இரு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு சென்று கொண்டிருந்தபோது காதைப்

(5ஆம் பக்கம் பார்க்க)

# ஹெலி நோட்டம்

[தொல்புரம்]

சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்றுமுற்பகல் 11.00 மணியளவில் பண்டத்தரிப்பு, சங்கானை, சுழிபுரம், தொல்புரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய வலிமேற்குப்

(5ஆம் பக்கம் பார்க்க)

# மூன்றாவதுநாளாக உண்ணாவிரதம் சோர்வடைந்த நிலையில் கைதிகள்

(யாழ்ப்பாணம்)

சென்றமுறை ஐந்து தினங்களில் ஏற்பட்ட சோர்வும் பலவீனமும் எமக்கு இப்பொழுதே ஏற்பட்டுவிட்டதென விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் யுத்தக்கைதி ஒருவர் நேற்று எமது செய்தியாளருக்குத் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் ஆரம்பித்து இரண்டாவதுநாளான நேற்று இருவர் மிகவும் பலவீனம் அடைந்து படுத்தபடுக்கையாக காணப்பட்டனர். மேலும் ஒருவர் வாந்தி எடுத்தவண்ணம் காணப்பட்டார்.

மேலும் உண்ணாவிரதக் கைதிகள் அனைவரும் சோர்வுற்ற நிலையிலேயே காணப்பட்டனர். யுத்தக்கைதிகளின் அருகே அவர்களது பெற்றோரும் உறவினரும் அமர்ந்திருந்தனர்.

இதேவேளை உண்ணாவிரதம் இருந்துவரும் இவ் யுத்தக் கைதிகளை யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளான திரு.பற்றிக்.செல்வி ஜெசபின் ஆகியோர் பார்வையிட்டனர்.

மேலும் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவிற்கும், பாதுகாப்பு செயலாளர் வோல்டர் பெர்னான்டோவிற்கும், ஆங்கிலத்திருச்சபை ஆயர் கென்னத் பர்னான்டோவிற்கும் விபரமான கடிதங்களை இவர்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளதாக தெரியவருகிறது.

(நி)

# இதயபூமி-1 நடவடிக்கையில் சிக்கிய ஏழு சிங்களப் பொதுமக்கள் புலிகளால் விடுவிப்பு

(முல்லைத்தீவு)

மணலாற்றுப்பகுதியில்விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இதயபூமி-1 நடவடிக்கையின்போது இடையில் சிக்கிக்கொண்ட ஏழு சிங்களப் பொதுமக்கள் விடுதலைப் புலிகளால் அழைத்துவரப்பட்டு உபசரிக்கப்பட்டபின் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் முல்லைமாவட்டத்தில்வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் விடுதலைப் புலிகள் சார்பில் மாவட்ட தலைவர் திரு. பாண்டியன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் எலிசபெத் கொப்மன், இலங்கை செஞ்சிலுவைச்சங்க சார்பில் திரு. செல

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## ஸ்ரீகாந்த் புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனெறிகள், இலங்கை வெளியீடுகள். ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி)கொமிக்ஸ் மங்கை மலர் கழிவுவிலையில் நல்லூர் உற்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர்

(சி-7071)

## தேவை

¼'' (அங்குலம்) இரும்புக் கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளப்படும். துண்டுக் கம்பிகளாயின் 2½' (அடி) க்கு மேல்இருத்தல் வேண்டும். தொடர்புகட்கு: சக்திப் பகுதி. த. பொ. மே. கழகம், காங்கேசன் துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-7098)

## மிருதங்கம்

மிருதங்க முழு வேலையும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (5541)

## விற்பனைக்கு

புதிய முதிரைப் பலகைகள் அகலம் 12''-24'' வரைவிலை சதுர அடி ரூபா 110/- முதல் 130/- வரை சில்லறையாகவும் விற்கப்படும் தொடர்பு: கு வல்லிபுரம், இராமலிங்கம் வீதி (முடமாவடி திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (5580)

## இலவச அக்குபஞ்சர் சிகிச்சை

01 08 93 ஞாயிற்றுக்கிழமை முதல் 35 ஐந்து சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வட இலங்கை அக்குபஞ்சர் சங்கத்தரல் இலவச வைத்திய சேவை நடைபெறும். தலைவர் Dr T. புவிராசன் (5579)

## மாணவப் பேச்சாளர்களுக்கு

பெரியார்கள், பண்டிகைகள் பொழுது போக்கு செல்லப் பிராணி போன்ற பல விடயங்களில் மாணவர்களுக்கான மேடைப் பேச்சுக்கள். ''என்னாலும் பேசமுடியும்''

பிரச்சினைகளை தீர்ப்பதில்

# அரசியல் கட்சிகளுக்கு அக்கறையில்லை

(கொழும்பு)

சிறிலங்காவில் பாராளுமன்ற ஆட்சிமுறையை முற்றாக எதிர்ப்பதாகவும், ஆனால் ஜே.வி.பி யினர் ஈடுபட்டது போன்ற நடைமுறைகளில் எந்தக் கட்டத்திலும் ஈடுபடப்போவதில்லை எனவும் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இடதுசாரிக் கட்சியான 'அளுத் ஜனதா மிதுரு' கட்சி நேற்று முன் தினம நடத்திய தனது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்த .

அக்கட்சியின் பேச்சாளரான பாலிக சந்தரவைத மேலும் கூறுகையில் பத்து ஆண்டுகளில் சிறிலங்காவின் ஆட்சியைக் கைப்பற்றுவதே தமது திட்டம் என்றும் தெரிவித்தார்.

சிறிலங்காவில் உள்ள பிரச்சினைகளை கட்சிகள் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கும் போதும் சில அரசியல் இலாபம் கருதி இதனைத் தீர்க்காது இருப்பதாகவும். இந்த நிலை தொடர்வது மக்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரிய பாதகமாக அமையும் விடயம் என்பதை அறிந்தும் கூட, நாட்டையோ மக்களையோ பற்றி கருத்தில் கொள்ளாது குறுகிய அரசியல் லாபத்தைக்கருதியே கட்சிகள் செயற்படுவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

அததுடன் இன்று நாட்டின் அபிவிருத்திக்குசெலவிடும்பணத்தின் பெரும்பங்குவீண்விரயம் ஆக்கப்படுவதாகவும், இதனால் அபிவிருத்தி குறித்த இலக்கை நோக்கி செல்ல முடியாமல் உள்ளது என்றும் தெரிவித்தார்.

தேசிய கட்சியாகப் பதிவு செய்யும் பொருட்டு தேர்தல் ஆணையாளரிடம் மனுச் செய்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

நாகர்கோயில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் நாவலர் இல்லம் (பச்சை) 361 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் விபுலானந்தர் இல்லம் [சிவப்பு] 353 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் சோமசுந்தரர் இல்லம் [மஞ்சள்] 306 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. அதிபர் திரு.ஆறுமுகவடிவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியிலே பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நிர்வாக அதிகாரி திரு. சி. பசுபதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (25)

# A/L 94

தூய, பிரயோக கணிதம்

ஆசிரியர்:

திரு. கிருஷ்ணா

ஆரம்பம்:

**01-08-1993**

சனி, ஞாயிறு பி. ப. 4 6 மணி

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/7101)

## எமது நேற்றைய வெளியீடுகள்

1. பிரபு-குஷ்பு-கவுண்டமணி
'தர்மசீலன்'
2. ராதிகா-கஸ்தூரி-ஜனகராஜ்

# Wanted Teacher

**St. Patrick's College Jaffna**

A full-time Teacher for Art-
Years 6 to 11

Apply before 7 August 1993. Please quote Ref.No. 30793.
A plications after 7 August 1993 will not be entertained.

(சி-7103) Rector

# நினைவு விழா வாழ்த்து

நடிகமணி **வி. வி. வைரமுத்துவின்** நினைவு விழாவும் கலாநிதி **காரை செ சுந்தரம்பிள்ளை** அரங்கேற்றும்வசந்தகான சபாவின்மயானகாண்டம் நாடகமும் வெற்றி பெற மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

(5583)

# விருதி மேற்பார்வையாளர் தேவை

10 வயதிற்கும் மேற்பட்ட பிள்ளைகளின் விடுதி மேற்பார்வையாளராக செயற்படுவதற்கென பெண்கள் தேவை.

கல்வித்தகைமை:- க பொ த. சாதாரணம் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

வயதெல்லை:- 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

இடம்:- திருநெல்வேலி, முத்துத்தம்பி வித்தியாலயம் அருகாமையில் உள்ள மகளிர் அலுவலகம்.

காலம்:- 04 08 1993

நேரம்:- 9-00 மணி. நேரில் சமுகம் தரவும்.

- நிர்வாகம்

(5581)

# 3 வது பிறந்தநாள்வாழ்த்து

## செல்வன் சந்துஜன்

அல்வாய் வடக்கு 'திருத்தணி' ஜெகநீதன் பொலின் டொலறோஸ் தம்பதிகளின் புத்திரன்செல்வன் சந்துஜன் இன்று தனது 3ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அப்பப்பா, குகன் சித்தப்பா, ரஞ்சன் சித்தப்பா, வாசு சித்தப்பா, மாமா, மாமி, சித்திமார், மைத்துனர், அம்மம்மா, தாத்தா, பாட்டி, மற்றும் உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

'திருத்தணி'
அல்வாய் வடக்கு.

குடும்பத்தினர்.
(5582)

# 1 வது பிறந்தநாள்வாழ்த்து

31-07-1998



# சிறந்த வீடியோ படங்கள்

எங்கள் மண்ணின் தயாரிப்பு!
சிறந்த கலைஞர்களின் பிரமிக்க வைக்கும் நடிப்பு!
பார்ப்பவர்களை கண்ணீர் சிந்தவைக்கும் காட்சிகள்!
இத்தனையும் ஒருங்கிணைந்த

"இது எங்கள் தேசம்"
" தாயகக்கனவு "

வீடியோ படங்கள் உங்கள் வீடுகளை நோக்கி வந்து விட்டன.
இன்றே உங்கள் வீடுகளில் பார்த்து மகிழுங்கள்

மற்றும் குடும்பத்துடன் பார்த்து மகிழக்கூடியவகையில் தணிக்கை செய்யப்பட்ட சிறந்த பழைய, புதிய சினிமா வீடியோ படங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**"நியூ விக்ரேஸ்"**
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(5578)

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## AL 94 (1 வருட வகுப்பு)

பொருளியல் - S. வரதராஜன்

பொருளியல் I மீட்டல்

பொருளியல் II பாடத்திட்டம் - வரவுசெலவுத் திட்டம்

ஆரம்பம்: **01.08.93** ஞாயிறு 11.00 A.M.

## A/L 95 புதிய பிரிவு

பொருளியல் - S. வரதராஜன்

உற்பத்தி இயல்தகவுவளையி

ஆரம்பம்: **01.08.93** ஞாயிறு 1.00 P.M.

(சி/7082)

# நினைவு கூருகின்றோம்...

**1993-07-31**

1987ஆம் ஆண்டு களுத்துறை தோட்டங்களில் சிங்களக்காடையர்கள் மேற்கொண்ட இனப்படுகொலை நடவடிக்கைகளின் போது உயிர் இழந்த ஒன்பது தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தியப்படையினரின் மிதி வெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**காந்தன்** (கந்தப்பெருமாள் ஜெயகாந்தன் - பாலையூற்று - திருமலை)

திருமலை - குச்சவெளி சேராற்றுப் பகுதியில் இந்தி

பெரியார்கள், பண்டிகை
ல் பொழுது போக்கு செல
ப் பிராணி வோன்றபல
டயங்களில் மாணவர்களுக்
ன மேடைப்பேச்சுக்கள்,
"என்னாலும் பேசமுடியும்"
ஆசிரியர் கோப்பாய் சிவம்
(5537)

## றேடியோ மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங்கடிகாரங்கள் 90/- டோமெற்றிக் கடிகாரங்கள் 125/- எலக்ரோனிக் கடிகாரங்கள்- 90/- -150/-மேசை சுவர் மணிக்கூடுகள் -100- 200/- றேடியோ மட்டும் 150/- கசற்றேடியோ— 200/- இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் டிக்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (சி-7087)

## மூன்று மாதம் சம்பளம் இல்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் கடந்த வைகாசி, ஆனி ஆடி ஆகிய மூன்று மாதங்களுக்குரிய சம்பளம் இன்று வரை கிடைக்கவில்லை என ஊழியர்கள் ஆழ்ந்த கவலையும், மன வேதனையும் அடைந்துள்ளனர்

கொழும்பு தலைமைச் செயலகத்துடன் பலமுறை கடிதத் தொடர்பு கொண்டும் செயலகத்துடன் தொடர்பு கொண்டும் இன்று வரை தங்கள் மூன்று மாதச் சம்பளமும் கிடைக்கவில்லை என ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (24)

## பரிசளிப்பு

தமிழ் மாமன்றத்தால் 03-07 93இல் நடாத்தப்பட்ட தமிழ்மொழிப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள்எதிர்வரும்19.08 93 வியாழனன்று மாலை 5மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

1. பிரபு-குஷ்பு-கவுண்டமணி
**'தர்மசீலன்'**

2. ராதிகா-கஸ்தூரி-ஜனகராஜ்
**'பாஸ் மார்க்'**

3. ஆனந்தபாபு-மோகினி-விவேக்
**'நான் பேச நினைப்பதெல்லாம்'**

4. பாபுகணேஷ்-ஷர்மிலி-குயிலி
**'கடல் புறா'**

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7104)

---

அரியாலை அருணோதயா
சனசமூக நிலையம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 06-06-93 ஆம் திகதி நடைபெறவிருந்து. சில தவிர்க்க முடியாத காரணங்களினால் காலம் பிற்போடப்பட்டு 29-07-93 ஆம் திகதி நடைபெற்றது இச்சீட்டிழுப்பிற்கு பிரதம விருந்தினராக தமிழீழகாவல்துறை யாழ். பணிமனைப்பொறுப்பாளர் திரு ஆ மோகன்ராஜ் கலந்து கொண்டு சிறப்பித்து வைத்தார். இச் சீட்டிழுப்பில அதிர்ஷ்டம் பெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசிற்குரிய இலக்கம் | : | 1888 |
| இரண்டாம் பரிசிற்குரிய இலக்கம் | : | 2516 |
| மூன்றாம் பரிசிற்குரிய இலக்கம் | : | 2548 |
| நான்காம் பரிசிற்குரிய இலக்கம் | : | 1705 |
| ஐந்தாம் பரிசிற்குரிய இலக்கம் | : | 104 |

மேற்கூறிய அதிர்ஷ்டசாலிகள் தமது அதிர்ஷ்டலாபச் சீட்டை மேற்படி நிலைய செயலாளர் நா. யோகராசா அவர்களிடம் ஒப்படைத்து தமது பரிசில்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

நிர்வாகிகள்,
அரியாலை அருணோதயா ச. ச. நிலையம்.

(5584)

---

## 1 வது பிறந்தநாள்வாழ்த்து

31-07-1993



செல்வி

## யேசுரட்ணம் ஜெனிஷலா

சரவணை மேற்கைச் சேர்ந்த யேசுரட்ணம் நிர்மலா தம்பதிகளின் அன்புப் புதல்வி ஜெனிஷலா தனது 1-வது பிறந்த தினத்தை இல. 75 A. V றோட் கொழும்புத்துறையில் உள்ள தனது இல்லத்தில் இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு டடி - மம்மி, கொன்சன் அண்ணா, சிப்ஷன் அண்ணா, ஜெஷலா அக்கா, டடி அப்பா, டடி அம்மா, அம்மம்மா, நீர் கொழும்பில் வசிக்கும் பயஸ் பெரியடடி, பெரியமம்மி, செல்வன் சித்தப்பா, சித்தி, லீனஸ் சித்தப்பா, அக்காமார், அண்ணா [நிரோஜன்], கொழும்புத்துறையில் வசிக்கும் பெரிய அத்தை, சின்னத்தைமார், நிக்லஸ் மாமா [டடா] மதி அங்கிள் [இ போ. ச ] மச்சாள்மார் நிமால் மச்சான் [ஜேர்மன்] இராஜரட்ணம் சித்தப்பா-சித்தி [நியூ ஜெயசலாஸ்ரோர்ஸ்] தேவதாஸ் மாமா - மாமி வசந்தன் மாமா - மாமி. [பூவரசங்குளம்], மச்சான்மார், மச்சான்மார், கைதடியில் வசிக்கும் பகவதி பெரியம்மா, தக்சாயினி அக்கா [யாழ். பல்கலைக் கழகம்], அண்ணன்மார், ரவீந்திரன் - வரதர்சினி குடும்பம் [சாவகச்சேரி டச்சு வீதி], மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளிலும் தேர்ச்சி பெற்று இறைவன் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(5577)

---

மூர்கள்.

1988ஆம் ஆண்டு திருமலை - குச்சவெளிப் பகுதியில் இந்தியப்படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய-

**காந்தன்** (கந்தப்பெருமாள் ஜெயகாந்தன் - பாலையூற்று - திருமலை)

திருமலை குச்சவெளி ரோராற்றுப் பகுதியில் இந்தியப் படையின் மிதிவெடியில் சிக்கி வீரச்சாவெய்திய-

**மனோகரன்** (மாரிமுத்து இராமநாதன் - குச்சவெளி- திருமலை)

இதே தினம் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி.

1990ஆம் ஆண்டு பலாலியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**2-ம் லெப். சிவமதி** (பவானி மனோகரநாதன் - கிண்ணியா - திருமலை)

மன்னார் - 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கேடில்ஸ்** (மிகேல் தேவதாஸ் - அச்சங்குளம், நானாட்டன் - மன்னார்)

**பொக்சன்** (வேலு சிவகுமார் - தண்ணீர்தாங்கியடி, முருங்கன் -மன்னார்)

**உரியவன்** (அப்பையா காசிப்பிள்ளை - வெட்டுக்காடு, பூநகரி - மன்னார்)

**2-ம் லெப். உதயகுமார்** (துரைராசா அன்ரன் சுதாகரன் - குருநகர் - யாழ்)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல்போன பொத்துவிலைச் சேர்ந்த 14 தமிழர்கள்,

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பெண் உட்பட கரடியனாறு கித்துல் பகுதியைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

கல்வியங்காடு - முத்திரைச் சந்தைப் பகுதிகளில் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின் போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய-

**செபமாலை** (அலெக்சாண்டர் றூபன் குரூஸ் மெக்சி- 3-ம் வட்டாரம, பேசாலை - மன்னார்)

**அன்பு** (யாக்கோப் அல்பின்கோட் - உயரப்புலம், ஆனைக்கோட்டை - யாழ்)

இதே நடவடிக்கையின் போது மாசாரில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் வீரச்சாவெய்திய- துணைப்படைவீரர்

**கண்ணன்** (நல்லையா பகிரதன் - வண்ணாங்கேணி-பளை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7099)

# இதய தெய்வத்துக்கு ......... எம் -

# இரண்டாமாண்டு அஞ்சலிகள்

## அமரர் உயர்திரு V. M. கணபதிப்பிள்ளை

அவர்கள்

[சாவகச்சேரி V. M. K. நகைமாளிகை உரிமையாளர்]

மண்ணில்

23 - 4 - 1913


♥



மனத்தில்

31 - 7 - 1991

♥



திதி:

**07. 08. 1993**

புன்சிரிப்புச் சிந்துகின்ற பூமுகமும் பூதலத்தில்
புகழ்பதித்த நல்வாழ்வும் பொன்மனமும் கொண்டெமது
இன்னலெலாம் களைந்திங்கு இனிமைதந்த நல்லருளே
இரண்டாண்டு ஓடியதோ இனிமைதரு முகம் மறைந்து
அன்பே யெம் ஆருயிரே அரவணைத்து எமைவளர்த்த
அருளமுதே அற்புதமே அஞ்சலித்தோம் மலர் சொரிந்தே
என்றைக்கும் எம்மனதில் ஏற்றியுமைத் தாள்பணிந்து
இதயத்திற் பூசிப்போம் இனியவரே நீர்வாழ்க!

-அன்பு மைந்தர்கள்
மருமக்கள், பேரர்கள்

(5560)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

''ஈராண்டு காலம் என்ன எம்
இதயம் உள்ளவரை உன் நினைவிருக்கும்''



தாயின் மடியில்:
04-07-1976

மண்ணின் மடியில்:
31-07-1991


### வீரவேங்கை அன்பு
[யாக்கோப் அல்டின் ஜோர்ஜ்]

தமிழீழத் தாயவளின் தலைநிமிர்வை எண்ணி
தலைவன் பாதை சென்ற எம் தனையனே
அன்பெனும் மூன்றெழுத்தால் அனைவரையும்
ஆட்கொண்டாய் - போர்க்களத்தில் அராஜக
அரக்கர் படை அலறிட போர் புரிந்தாய்
ஆனையிறவின் அறப்போரில் அரக்கர்களை
அழித்திடவே அணிதிரண்டு சென்ற நீ -
கடைக்காட்டில் கரைமிதித்த கயவர்களை
களைபிடுங்கும் களத்தினிலே காலன்
உன்னைக் கவர்ந்தானோ?
மறவர் குல மாந்தனே நின் மரணம்!
நிலைத்து நிற்கும்!
நினைவின் காவியம் உன் இலட்சியம் தோற்காது

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதர, சகோதரிகள்
அத்தான், அண்ணிமார் உறவினர்,
மருமக்கள், மக்கள்.
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(5565)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு
07-07-1971

அந்நியன் அழிப்பு
31-07-1991

துணைப்படை வீரர் கண்ணன்

## ஆலயப் பொருள்களை ஹெலியில் ஏற்றிய படையினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் பல கிராமங்களை சுற்றிவளைத்த இராணுவத்தினர் தந்தாமலை முருகன் ஆலயத்தை சுற்றிவளைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகளையும், பேரீச்சம்பழ மூடைகளையும் தமது உலங்கு வானூர்தியில் ஏற்றிச் சென்றனர்.

கடந்த புதனன்று வவுணதீவு, கொக்கட்டிச்சோலை, 40 ஆம் கிராமம் புளுகணாவி, ஆயித்தியமலை ஆகியமுகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் பாவற்கொடிசேனை, நெடுஞ்சேனை, நல்ல தண்ணீர் ஓடை, தாந்தாமலை பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

## கப்டன் கஸ்தூரிக்கு பிறந்தநாள் 31-07-1968



### கப்டன் கஸ்தூரி
[வசந்தி கணேசன், ஊரெழு]

மகளே! வசந்தி
இல்லை, கப்டன் கஸ்தூரி
உனக்கு இன்று பிறந்தநாள்
நேரில் வாழ்த்துக்கூற நீயில்லை
நீ பிறந்தது
வளர்ந்தது
படித்தது
போராடப் போக அனுமதி கேட்டது
அப்பனே உனக்கு வாழ்த்துக்கூறி
வழியனுப்பி வைத்தார்
தமிழனின் மானஉணர்வுக்கு மகுடம் சூட்டிய
ஆனையிறவுச் சமர்
அந்தச் சமரினிலே நீசரிந்தாய்
இன்று உன் பிறந்த நாளிலேயே
உனக்கும் சேர்த்து ஒரு நினைவாலயம்
அங்கு நீயும் நிழற்படமாய்
நினைக்கப்படும் உயிராய்
மகளே!
மரணம் உன்னிடம் தோற்றது
எங்கள் பிரியமான உதிரப் பூவுக்கு
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

வாழ்த்துக்கூறும்
அப்பா, அம்மா, உடன்பிறந்தோர்
மகள் திரிசனா (அம்மு).

1-8-1993 அன்று அன்னாரின் இல்லத்தில் பிறந்தநாள் விழா நடைபெறும் (5576)

## இவன்நினைவில்ஈராண்டு!

## இராணுவ விசாரணை நடத்த அதிகாரிகள் குழு நியமனம்

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் அழிக்கப்பட்டது தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கவென விசாரணை நீதிமன்றம் ஒன்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில்வைத்தியரட்னவினால் நேற்று அமைக்கப்பட்டது.

இராணுவத்தின் பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா, இந்த விசாரணை நீதிமன்றத்திற்கு தலைமை தாங்குகிறார். பிரிகேடியர் நந்த டிசில்வா, பிரிகேடியர் சிறில் பீரிஸ், கேணல் சிசிர விஜேதுங்க ஆகியோரே அதில் அங்கம் வகிக்கும் ஏனைய அதிகாரிகள்.

இதுபோன்ற தாக்குதல்கள் எதிர்காலத்தில் இடம்பெறாது தடுக்க சிபார்சுகளை செய்யும்படி இராணுவத்தளபதி இந்த விசாரணை மன்றத்தை கேட்டுள்ளார்.

## உழைப்பாளரை இழந்த குடும்பவிபரம் சேகரிப்பு

உழைப்பாளரை இழந்து வறுமை நிலையில் தமது குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் உள்ள குடும்பங்கள் பற்றிய விபரத்தினை 06 08.93க்கு முன்னர் யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களும் மேலதிக அரசாங்க அதிபரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

வன்செயல் அல்லது இயற்கை மரணம், காணாமற் போதல், வன்செயல் அல்லது வேறு காரணங்களால் உழைக்கும்ஆற்றலை இழத்தல், உழைப்பாளரால் கைவிடப்பட்டிருத்தல் எனும் காரணங்களில் ஒன்றினால உழைப்பாளரின் வருமானத்தை இழந்து, குழந்தைகளை பராமரிக்க முடியாத நிலையில் உள்ள வறிய குடும்பங்களின் விபரங்களை கிராமசேவகர்களூடாகத் திரட்டி பிரதேச செயலர்கள் 06 08. 93க்கு முன்னர் யாழ். செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை இனங்காண்பதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்பாடு செய்திருந்த ஆய்வுப் பட்டறையின் செயற்திட்ட முன் மொழிவுகளுக்கமைவாக யாழ். மாவட்டத்துக்கான பொதுத்திட்டம் ஒன்றிற்கான வழிகாட்டலை இனங்காண்பதற்கான ஆலோசனைச்சபை ஒன்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஏற்படுத்தியிருந்தது.

மேலதிக அரசாங்க அதிபர் தலைமையிலான இச்சபையில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு.பாலகிருஷ்ணன், திட்டப் பணிப்பாளர் திரு பத்மநாதன், பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர்கள் திரு சிவநாதன், செல்வி அம்பிகா சின்னத்தம்பு, அறவழிப் போராட்டக்குழு உபதலைவர் திரு. தங்கவேல், அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் செயலாளர் திரு. கிட்டினன், தமிழர் . புனர்வாழ்வுக் கழகத்தின் செயலாளர் திரு. சொ. யோகநாதன், ஊற்று நிறுவனச் செயலாளர் திரு விக்கினேஸ்வரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## உடுகம்பொலவிற்கு பதவி வழங்கப்பட்டது

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல அண்மையில் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பிரதித் தலைவராக பதவி ஏற்றுள்ளார்.


## BECON-கல்வி நிறுவனம்
STANLEY ROAD, JAFFNA.

★-94 - A/L-★

விஞ்ஞான துரித மீட்டல் வகுப்புகள்
(பயிற்சிபரீட்சையுடன் கூடிய அலகுரீதியான மீட்டல்)

சனி - ஞாயிறு

10-00—11-00 } விலங்கியல் — திரு கெங்காதரன்
03-00—04 00 }
11 00—12 00 } தாவரவியல்— திரு.செல்வநேசன்
02-00—03-00 }
12 00—01-00 இரசாயனம்—திரு. தில்லை
01 00—02-00 பௌதிகம் — திரு. வர்ணம்
10-00—12-00—தூய/பிரயோக கணிதம்—திரு. கிருஷ்ணா

வினா விடை; நேர விபரம்:
பௌதிகம்/
இரசாயனம்—செவ்வாய்—03-00—04-00
தாவரவியல்/
விலங்கியல்—செவ்வாய் 04-00—05 00
தூய/பிரயோககணிதம்—வியாழன்—03-00—04-00

★ஆரம்பம் - 01.08 1993★
ஞாயிறு காலை 10-00 மணி

(சி-7083)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் வழங்கும்

## முழுநிலா நாள் அறிவியல் அரங்கு

01-08-93 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்

3.30 - 4.30 மணி

## "தமிழீழ நோக்கு" வெளிவந்துள்ளது

"தமிழீழ நோக்கு" எனனும் ஆய்வு சஞ்சிகை இன்று வெளிவருகிறது. யாழ் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இம் மூன்றாவது இதழில் மாணவர் பங்கு

## துணைப்படை வீரர் கண்ணன்

[நல்லையா பகீரதன்]


பெற்றவர்கள் உள்ளமதில் பற்றோடு உறைந்தவனே!
சிற்றெறும்பு கூட உனை சீக்கிரத்தில் மறக்காது
அண்ணன் சென்ற பாதையிலே சென்றாய்!
ஆனையிறவுப் போரினிலே மாண்டாய்!
ஆண்டு இரண்டு ஆனாலும் உன்னை நினைக்கையிலே
உள்ளம் உருகுதையா ஊரும் அழுதையா
உன் விருப்பம் நிறைவேறும் உன் ஆத்மா சாந்திபெறும்.

வண்ணாங்கேணி, பளை. — தாய், சகோதரன், சகோதரிகள், மைத்துனர்கள், உறவினர்கள் நண்பர்கள்.

(சி/7102)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மழலையாய் 28 01-1973

மாவீரனாய் 05 08 1990

## வீரவேங்கை சந்துரு

[செல்வன் இராசையா திருமாறன் (மாறன்)]

திதி: 31-07-1993

தமிழ்த்தாயின் விலங்குடைக்க
விரைந்த எம் மாறனே
சந்துருவாய் நீ மாறி
சரித்திரம் படைத்து விட்டாய்
உன் கனவுகள்
கனியும் காலம் மிக விரைவில்

மண்டான்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

சந்துரு குடும்பத்தினர்.

(5567)

---

[illegible]



தரணிக்காக: 02-10-1968

தமிழிற்காக: 30-07-1991

## லெப். அல்பிரட் (மயூரன்)

(யோசெப் கெனடி சின்னத்துரை)

தரணியிலே தமிழர் தலைநிமிர்த்தி வாழ
தகுந்தவழி தேடியவன் - அதனால்
தாயைப் பிரிந்து தலைவன் வழி சென்றவன்
தலைவன் காட்டிய வழியில் செம்மையாய் நடந்தவன்!

கயவரைக் கலைக்க களம் புகுந்தவன்
கட்டைக் காட்டில் காவியம் படைக்கச் சென்றவன்
காடையரைக் கசக்கிட காற்றெனப் பறந்தவன்
காலவன் பின்னே வருவதைக் கவனியாது போயினான்!

வட்டமிட்டு வானில் வந்த கயவர்
வண்ணமேனி சிதையும்வரை குண்டுமழை பொழிந்தனர்
வடிவான உன்மேனி வடிவிழந்து போயிடவே
வட்டமுகம் காணாது கலங்கினரே எம்மவர்!

''ஈராண்டு இறக்கை முளைத்துப் பறந்தாலும்
இவன் நினைவு! பறந்திடுமா? மறந்திடுமா?''

லெப்டினன்ட் அல்பிரட் அவர்களின் இரண்டாவதாண்டு நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

சரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

இம்மறவன் மறைவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

[5573]

---

**3.30 - 4.30 மணி**

''சமகால உலக விவகாரங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்''

திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்)

**4.30 - 5 30 மணி**

''தலைமைத்துவமும் அதனை வளர்த்துக் கொள்ளலும்''

திரு. கனகசபை சிவானந்தமூர்த்தி
(சிரேஷ்ட விரிவுரையாளர் பெய்யியல்துறை
யாழ்ப்பாணம பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— பாலசுப்பிரமணியம் தவபாலன்.
(செயலர்)

(சி-7097)

---


Tasty!

உணவின் சுவையை அதிகரிக்க நாம் வழங்கும்

## ஊறுகாய் வகைகள்

1. தேசிக்காய் ஊறுகாய்
2. மாங்காய் ஊறுகாய்
3. பாகற்காய் ஊறுகாய்
4. கத்தரிக்காய் ஊறுகாய்
5. நாரத்தங்காய் ஊறுகாய்
6. உள்ளி ஊறுகாய்
7. வெங்காயச்சட்னி (சீனிச்சம்பலைப் போன்றது)
8. மாங்காய்ச்சட்னி

அத்துடன் திடீர் ரசம்

உங்கள் வியாபாரிகளிடம் கேட்டு வாங்கிச் சுவைத்து மகிழுங்கள்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி/7094)


---

றாவது இதழில் மாணவர் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பிறமொழிச் சொல் நீங்கிய தமிழ்மொழி தமிழிலக்கியத்தில் பெண்கள் எம பிரதேச மக்களின் உள்-வெளி இடப்பெயர்வும் அதன்விளைவுகளும் விறகுத்தேவையும் ஈடுசெய்யும் வழிமுறையும் என்பன போன்ற பல சிறப்புக்கட்டுரைகளை உள்ளடக்கியதாக இது வெளியிடப்பட்டுள்ளது.

### சம்பளக் கொடுப்பனவு

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஆனி மாதத்திற்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் இன்றுமுதல் நாவலர் வீதியிலுள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுமென கூட்டுத்தாபன கணக்காளர் தெரிவித்துள்ளார்.

### உதவிக் கொடுப்பனவு

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொழுநோய், புற்றுநோய், கசரோக நோயாளர்களுக்கான சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் யாழ் பிரதம தபால் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் வேலணைபுங்குடுதீவு தபாலகங்களில் வைத்து வழங்கப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இத்தபாலகங்களில் தமக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

### விளையாட்டுப் போட்டி

மூளாயில் இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று காலை ஆறுமணிமுதல் ஆரம்பமாகவுள்ளது. சைக்கிளோட்டப்போட்டிகள், மரதன் ஓட்டப் போட்டிகள் என்பனவும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிந்தனைக்கு

கண்டனத்துக்குப்பின் அளிக்கும் ஆதரவு மழைக்குப் பின் காயும் வெயில்போன்றது

–யொஹான் கேத்தெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 31-07-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## நாளாந்த நிகழ்ச்சியாக இனப்படுகொலை

கடந்த சில தினங்களாக மீண்டும் சிறிலங்கா அரசு இனப் படுகொலைகளை அதிகரித்துள்ளது. அப்பாவிப் பொதுமக்கள் எனத் தெரிந்திருந்தும் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலைகளுக்கு சிங்கள அரசாங்கம் எந்தவிதமான நியாயங்களும் கற்பித்துவிட முடியாது.

கடந்த 27ஆம் திகதி, குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான 'சுப்பர் சொனிக்' விமானங்கள் வீசிய குண்டினால் பள்ளிச் சிறார்கள் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதேவேளை, 29 ஆம் திகதி அதிகாலை சிறிலங்கா கடற்படை மேற்கொண்ட தாக்குதலில், எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். ஆறு பேர் காணாமற் போயுள்ளனர். இவர்களில் அநேகர் இறந்திருக்கலாம் என்றே அஞ்சப்படுகிறது.

கிளாலிக் கடலில் தாங்கள் அப்பாவிப் பொதுமக்கள் எனப் பயணிகள் கதறி அழுதபோதும், சிங்களப்படை தனது வெறித்தனத்தைக் காட்டத் தவறவில்லை. மாறாக கொலைகள் புரிந்த பின்னர், படகுடன் தீ வைத்துக் கொளுத்தும் முயற்சியிலும் இறங்கியது.

ஆனால், சிங்களப் படையினரின் இனப்படுகொலை நடவடிக்கைகள் குறித்துக் கண்டனம் தெரிவிப்பது எந்தளவிற்கு நன்மை பயக்கக்கூடியது என்பதும், பொருத்தப்பாடானது என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில், படுகொலைகள் நாளாந்த நிகழ்வுகளாகி விட்ட நிலையில், ஒவ்வொரு படுகொலைக்கும் கண்டனம் தெரிவிப்பதனால், அவற்றில் பயன் எதுவும் உண்டா? என்பது சந்தேகமானதே.

ஆனால், பௌத்த சிங்களப் பேரினவாதம் புரியும் இவ் இனப்படுகொலைகளைக் கண்டும் காணாமலும் இருப்பதும், அவற்றிற்கு மறைமுகமாக ஆதரவளிப்பதிலும், பல சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளன. இவற்றில் கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களும், மனித உரிமைக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்குழு எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் சிறுகுழுக்களும் அடங்குகின்றன. இவர்களின் புலிகளுக்கு எதிரான நிலைப்பாடானது, இனப்படுகொலைக்கு சிங்கள அரசிற்கு ஊக்கம் அளிக்கும் நடவடிக்கையாகவே உள்ளது. அதாவது,

எமது பிரச்சினையில்

# அரசியல் லாபம் தேட அரசியல்வாதிகள் முயற்சி

## உண்ணாவிரதம் இருக்கும் கைதி கவலை

(யாழ்ப்பாணம்)

எமது பிரச்சினையை பல அரசியல்வாதிகள் அரசியல் விடயமாக ஆக்கமுனைகின்றார்கள். அதன் பின்னணியில் இப்பிரச்சினையை நோக்கி மக்களை ஏவிவிட்டு மக்களிடம் ஒரு தவறான அபிப்பிராயத்தை உருவாக்கி இனவாதிகளாக ஆக்க முயல்கின்றது இதற்கு சில சிங்களப் பத்திரிகைகளும் துணை போகின்றன என ஆனந்தஉபாலி தெரிவித்தார்.

மூன்று ஆண்டு காலமாக அதாவது முதல்முறை உண்ணாவிரதம் இருக்கும் வரை எமது விடுதலைக்கான எந்த ஒரு உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இங்கு வந்து சென்ற மாதம் பாகம அஸாஜி தேரோ, அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ ஆகியோரின் பயணங்களைத் தொடர்ந்துஎமது விடுதலைக்கான பேச்சுக்கள் நடைபெற்றன அதுவும் மழுங் கடிக்கப்பட்டு போகும் நிலையில் நாம் உண்ணாவிரதம் தொடர்பாக சுதந்திரமான முடிவெடுத்தோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்

எந்தக் கட்டத்திலும் நாம் முன்னர் விட்ட பிழையை விடத் தயாராக இல்லை. எனவே, எமது விடுதலை அல்லது மரணம் இதுவே எமது கொள்கையாகவுள்ளது. இது எனது கருத்து மட்டுமல்ல இங்குள்ள 33 பேரினதும் ஏகோபித்த கருத்தாகும்.

இங்கு எம்முடன் இருந்த 6 பேரும் தொடர்ந்து உண்ணா நோன்பை மேற்கொண்டதனால் நோயாளியாகி நாரஹேன்பிட்டி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். இங்கிருந்து சென்ற சில உறவினர்கள் தம்மால் இயன்ற சகல வழிகளிலும் எமது விடுதலை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது எவ்வளவு தூரம் சாதகமாக அல்லது பாதகமாக அமையும் என வரையறுத்துக் கூற முடியாதுள்ளது. இந்த நிலையிலேயே நாம் எமது இந்த உண்ணா விரதத்தை மேற்கொள்கின்றோம் என்றும் கூறினார்.

## எம்மவர்களுடனேயே நாம் வீடு திரும்பிச் செல்வோம்

### கைதியின் தாயார் உறுதி

(யாழ்ப்பாணம்)

பல சிரமத்தின் மத்தியிலேயே எமது உறவினர்களை பார்வையிட நாம் இங்கு வந்தோம். எமது பிள்ளைகளின் விடுதலையுடனேயே நாம் வீடு திரும்புவோம். இது அவர்கள் தமது விடுதலைக்காக நடத்தும் போராட்டம் இதனைத் தடுக்க கூடிய வலிமையோ உரிமையோ எமக்கு கிடையாது என விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதியான சிசிர சாந்த லாலின் தாயாரான கேகாலையைச் சேர்ந்த சோமாவதி நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இது எனது கருத்து மட்டுமல்ல விடுதலையை எதிர்நோக்கியிருக்கும் அனைவரினதும் ஏகோபித்த கருத்துமாகும். எம்மால் அங்கு வரையறுத்த அளவிலேயே செயலாற்ற முடியும். அதாவது இது தொடர்பாக செலாற்றக் கூடியவர்கள் இங்கிருந்து சென்றவர்களே ஆவர்.

அரசை எதிர்த்து எமக்காக தியாகங்களை செய்ய எவரும் முன்வரப்போவதில்லை. எனது பிள்ளையின் விடுதலைக்காக நான் தனியே போராட்டம் நடத்த வேண்டும். தனது உயிருக்கு ஆபத்து வரும் என்று பயந்து எமுடன் பிறந்த உடன் பிறப்புகளே கடிதம் எழுதாது விடுகின்றனர். அந்த நிலையிலேயே இவர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஊர்வலங்களுக்கு சென்றவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்

கிறார்கள். சாதாரணமான எம் அயலவர்கள் இதனைச் சாதாரண பிரச்சினையாகவே கொள்கின்றனர். இப் பிரச்சினையை தமது சொந்த பிரச்சினையாக கருத இவர்கள் முன் வருவதில்லை என்றும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிபிரேமதாசா இல்லாத காரணத்தினாலேயே எம்மால் இங்கு வரக் கூடியதாக இருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அங்கிலிக்கன் ஆயருடன் பிரதமர் ரணில் சந்திப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு காணப்பட வேண்டும். இப் பிரச்சினை இன்று தேசியப் பிரச்சினையாக அமைகின்றது. எனவே கூடிய விரைவில் இதனைத் தீர்க்க வேண்டும் என்று அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் கெனத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஆயரைச் சந்தித்துப் பேசிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதே வேளை விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில்இருக்கும்போர்க் கைதிகளின் விடுதலைதொடர்பாகவும், உண்ணாவிரதம் மேற் கொள்வதால் ஏற்படும் விளைவு தொடர்பாகவும், இங்கு பேசப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

## இரு மீனவர்களும் படையினரால் விடுவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து காணாமல் போன இரண்டு மீனவர்கள் நேற்றுமுன்தினம்பலாலி இராணுவமுகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்

இம்மாதம் 14ஆம் திகதி கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட சவரிமுத்து கள் வெற்றிலைக்கேணி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பலாலி முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டு பதினைந்து தினங்கள் பலாலியில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் தமது இயந்திரத்தையும் எடுத்து வந்துள்ளனர். இவர்களது படகும்,

## ஆட்கள் இல்லா வீடுகள் படையினரால் தகர்ப்பு

[வடமராட்சி]

இளவாலை, மாதகல் பகுதிகளில் ஆட்கள் இல்லாத வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுவருகின்றன. ஆட்கள் குடியிருக்கும் வீடுகளில்வெள்ளைக்கொடிகள் தொங்கவிடப்பட வேண்டும்.

இளவாலை, மாதகல் பகுதிகளில் இராணுவத்தினரால் பதினொரு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட வர்த்தகர்களில் ஒருவரான மாதகலைச் சேர்ந்த சிவானந்தம் - தெய்வானை என்ற வயோதிபமாது இவ்வாறு வடமராட்சி செய்தியாளருக்கு பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது ஆட்கள் இல்லாதவீடுகளில் உள்ள பொருள்கள், தளபாடங்கள் இராணுவத்தினரால் சூறையாடப்பட்ட பின்னர்வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றன. அப்பகுதி ஒரு வனாந்தரப் பிரதேசமாக காட்சியளிக்கின்றது.

நாங்கள் எங்களை விடுவிக்குமாறு பங்குனி மாதம் இராணுவ உயர் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்திருந்தோம். ஆனால் இப்போது தான் விடுதலை கிடைத்தது அங்கு இருப்பவர்கள் யாழ்ப்பாணமவரத் துடிக்கின்றனர். இராணுவம்

### விடுவிக்கப்பட்டவர் தகவல்

அனுமதி மறுத்து வருகிறது.

இப்பகுதியில் உள்ள மூன்று ஆலயங்கள் ஒரு வருட காலமாக பூசைகளும்இல்லாமல், மக்கள் வழிபாடும் இல்லாமல் காணப்படுகிறது. எங்களுக்கும் ஆலய தரிசனம் செல்ல அனுமதி கிடைப்பதில்லை. எங்கள் இருப்பிடத்தில் இருந்து கால் மைல்தூரத்திற்கு அப்பால்செல்லவும் அனுமதி தரமாட்டார்கள்.

இராணுவம் இப்பகுதியில் உள்ள வேலிகள், வைக்கோல் போர், வீடுகளை கண்ட கண்டபடி தீயிட்டுக் கொளுத்தி வருகின்றனர். அங்கிருந்த கால் நடைகள் எல்லாவற்றையும் இராணுவத்தினர் ஏப்பமிட்டு விட்டனர். வீடுகளில் கூட்டாக பலபேர் தங்கவோ, கூட்டமாக நடமாடவோஇராணுவம் அனுமதிக்காது.

இரவு நேரங்களில் வெடிச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருக்கும், தமது பாதுகாப்புக் கருதி சுற்றுப்புறங்கள் நோக்கி தாக்கிக் கொண்டிருப்பார்கள். ஆனால் சத்தங்கள் கேட்டு ஏதோ என்னவோ என நாங்கள் பயத்தால் நடுங்குவோம். மாதகலில் இன்னும் சுமார் 65 பேரளவிலும், இளவாலையில் சுமார் 200பேரளவிலும் இருக்கின்றனர் என்றார். [யோ]

## முகாமில் பலியானவர் லெப். விஜயநாயக்கா

(கொழும்பு)

கடந்த ஞாயிறன்று மணலாறு மண்கிண்டிமலை இராணுவமுகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டபோது கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி லெப்டினன்ட் விஜயநாயக்கா எனஅடையாளம்காணப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் அதிகாரி உட்பட 50 இற்கும் மேற்பட்ட படையினர் பலியானது தெரிந்ததே

லெப்டினன்ட்விஜயநாயக்கா முகாமை தாக்கியபுலிகள்படையினரின் ஆயுதங்களை கைப்பற்றுவதை தடுக்கமுயன்ற போது கொல்லப்பட்டார் என கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதய பூமி 1 இல் பலியான

## படையினரின் அஸ்தி புலிகளால் ஒப்படைப்பு

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பலியான படையினரில் 18 படையினரின் அஸ்தி அடங்கிய கலசத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் வழங்கியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக சடலங்கள் மீள ஒப்படைக்க முடியாத நிலையில் உருக்குலைந்திருந்தமையால் அவை தகனம் செய்யப்பட்டு விட்டமையும் இராணுவத்தினரின் அஸ்தியையாவது தமக்கு தருமாறு இராணுவ அதிகாரிகள் கோரியிருந்தமையும் தெரிந்ததே.

## மன்னார் ஜீவா நகரில் விமானக் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் ஜீவநகர் விவசா

தியை வட்டமிட்ட இவ் இரண்டு குண்டுவீச்சு விமானங்

பது சந்தேகமானதே.

ஆனால், பௌத்த சிங்களப் பேரினவாதம் புரியும் இவ் இனப்படுகொலைகளைக் கண்டும் காணாமலும் இருப்பதும், அவற்றிற்கு மறைமுகமாக ஆதரவளிப்பதிலும், பல சக்திகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ளன. இவற்றில் கொழும்பிலுள்ள தமிழ் குழுக்களும், மனித உரிமைக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர்குழு எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் சிறுகுழுக்களும் அடங்குகின்றன. இவர்களின் புலிகளுக்கு எதிரான நிலைப்பாடானது, இனப்படுகொலைக்கு சிங்கள அரசிற்கு ஊக்கம் அளிக்கும் நடவடிக்கையாகவே உள்ளது. அதாவது, எண்ணிக்கை நிறைந்த, உறுப்பினர் அற்ற இத்தமிழ் குழுக்களைக் கொண்டு இலங்கையில் இன ஐக்கியம் நிலவுவதாக சித்திரிக்க பேரினவாத அரசாங்கம் முற்படுகின்றது.

இதேவேளை, சிறிலங்காவிற்கு பொருளாதார வளர்ச்சிக்கென உதவும் வெளிநாடுகளும், நிதி நிறுவனங்களும் இனப்படுகொலைக்கு ஒருவகையில் ஊக்கம் கொடுப்பனவையாகவும், ஒத்தாசை புரிபவையாகவுமே உள்ளன. அதாவது, தற்பொழுது உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் மனித உரிமை பேணப்படுவது குறித்து பெரும் பிரஸ்தாபம் செய்த பின்பே வருடம் தோறும் கடன் வழங்குகின்றன. ஆனால், அவை கடன் வழங்குவதற்கும் கடன் கொடுப்பதற்கும் மனித உரிமை நிலைமைகளைப் பற்றிக் கருத்திற் கொள்வதை விட தமது மூலதனத்திற்கான பாதுகாப்பையும் தமது வருமானத்தின் அளவையுமே பார்க்கின்றன.

அவ்வாறு இல்லாது போனால், சிறிலங்காவிற்கு எவ்வாறு இவ் உதவிகள் கிடைக்க முடியும்? ஏனெனில், இனப்படுகொலையை தாராளமாக மேற்கொள்ளும் சிறிலங்காவிற்கு எவ்வாறு மனித உரிமைகள் பேணுவதில் முன்னேற்றம் இருப்பதாகக் கூறி நிதி உதவிகளை வருடா வருடம் வழங்க முடியும்?.

இதேவேளை, கடன்கள் சிறிலங்காவிற்கு வழங்கப்படுவதினால், சிங்கள அரசு போரைத் தடையின்றி நடத்துச் செல்கின்றது இதனால் தமிழ் மக்கள் சிங்கள அரசிற்கு எதிராக மட்டுமல்ல: நிதி வழங்கும் நாடுகளுக்கும், நிறுவனங்களுக்கும் எதிராகப் பிரசாரம் செய்ய வேண்டிய அநாவசிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஏனெனில், உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் மனித உரிமைகளைச் சீர்தூக்கிப் பார்த்தே நிதி உதவிகளை வழங்குவதாகக் கூறிக் கொள்வதால், உலகில் பலரும் சிறிலங்காவில் நடைபெறும் இனப்படுகொலைகள் குறித்து கருத்திற் கொள்வதாக இல்லை. இந்நிலையில், உதவி வழங்குவோர் சிறிலங்காவிற்கு நிதியை மட்டுமல்ல, அது புரியும் இனப்படுகொலைக்கு உதவியும் பாதுகாப்பும் வழங்குகின்றன என்றே கூறலாம். இனப்படுகொலைக்கு உள்ளாகும் இனம் ஒன்றிற்கு ஏற்படும் இப் பாதிப்பை இனிமேலாவது உதவி புரிபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அல்லது மனித உரிமைகள் பற்றி பேசுவதை தவிர்த்தல் வேண்டும்.

---

அரசை எதிர்த்து எமக்காக தியாகங்களை செய்ய எவரும் முன்வரப்போவதில்லை. எனது பிள்ளையின் விடுதலைக்காக நான் தனியே போராட்டம் நடத்த வேண்டும். தனது உயிருக்கு ஆபத்து வரும் என்று பயந்து எம்முடன் பிறந்த உடன் பிறப்புகளே கடிதம் எழுதாது விடுகின்றனர். அந்த நிலையிலேயே இவர்கள் சிக்கித் தவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் ஊர்வலங்களுக்கு சென்றவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் கிராமமக்கள் ஊர்வலம் அல்லது அரசுக்கு எதிரான போராட்டம் என்றாலே பயந்து நடுக்கம் எடுக்

---

எம்மை

போனது. அப்போது நாங்கள் காற்றால் தள்ளப்பட்டு நிலத்தில் வீழ்ந்தோம். பின்னர் என்ன நடந்தது என்பது எங்களுக்கு தெரியவில்லை. ஒரே புகையும் தூசியுமாக இருந்தது நாங்கள் மண்ணால் மூடுண்டிருந்தோம்'' இவ்வாறு விமானக் குண்டு வீச்சிலிருந்து தப்பிய சித்தன்கேணியைச் சேர்ந்த க. ரமணன் என்பவர் எமது செய்தியாளருக்கு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், நாங்கள் விழுந்த இடத்திற்கு சற்று தள்ளியே இரண்டு குண்டுகளும் வெடித்துள்ளன என்று புகையும் புழுதியும் எமது மேலில் விழுந்தபோது நினைத்தோம். ஆனால் அது எங்களுக்கு மிக அருகிலேதான் விழுந்து வெடித்துள்ளதென்பது புழுதியும் புகையும்

---

ஏழு சிங்கள

வரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் மாவட்டத் தளபதி திரு. பாண்டியன் கருத்துத் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் அப்பகுதி மக்கள் சிக்கி உயிரிழக்கவோ, காயப்படவோ கூடாது என்பதற்காகவே அவர்கள் இவ்வாறு அழைத்துவரப்பட்டார்கள் என்றார்.

நந்தசிறி (24), நந்தசிறிகுஸ் தமயந்தி, நந்தசிறி தினேஷ சிங்கா, யந்துலாங்கனி (18), சூரசேன விமலாவதி (28), சிந்தக ஜெமதாஸ, சமான் (17) ஆகியோரே இவ்வாறு பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

---

# இரு மீனவர்களும் படையினரால் விடுவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து காணாமல் போன இரண்டு மீனவர்கள் நேற்றுமுன்தினம் பலாலி இராணுவமுகாமில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இம்மாதம் 14ஆம் திகதி கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட சவரிமுத்து ஜேம்ஸ்ராசநாயகம், வேலாயுதம் சிவம் ஆகியோரே நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் வெற்றிலைக்கேணி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பலாலி முகாமுக்கு கூட்டிச் செல்லப்பட்டு பதினைந்து தினங்கள் பலாலியில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் தமது இயந்திரத்தையும் எடுத்து வந்துள்ளனர். இவர்களது படகும், வலையும் கடலில் கடற்படையினரால் சேதமாக்கப்பட்டு நாசமடைந்தன. (யோ)

---

முறைந்த பின்னர் பார்த்தபோது தெரிந்ததென்றனர். குமரன், திலீபன் என்பவர்களே மற்ற இருவருமாவர்.

இதேவேளை இப்பகுதிக்கு அருகில் புக்காரா விமானம் குண்டு வீசியபோது கே. வி. சுந்தரராஜா என்பவர் தான் பயத்தில் கிணற்றுக்குள் இறங்கி விட்டதாகவும் தனக்கு அப்போது அதைவிட்டால் வேறு பாதுகாப்பான இடம் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை என்றார்.

இதேபகுதியைச் சேர்ந்த ராஜேஸ்வரி என்பவர் தெரிவிக்கையில்: நானும் பிள்ளைகளும் விமானத்தைக் கண்டவுடன் பதுங்கு குழிக்குள் இறங்குவதற்காக ஓடிவந்தோம். நாங்கள் பதுங்கு குழியின் வாசலுக்கு கிட்ட வருமுன்பே எமக்கு மிக அருகில் குண்டு வீழ்ந்து வெடித்தது. மண்கட்டிகளும் எம்மீது வந்து விழுந்தது தெய்வாதீனமாக உயிர் தப்பிவிட்டோம் என்றார். (சி)

---

சுப்பர்சொனிக்

வீடுகள் தேதமடைந்தன. வட்டுக்கோட்டைப் பகுதியில் ஏழு வீடுகள் சேதமடைந்தன.

வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதேவேளை வட்டுக்கோட்டைப் பகுதியில் சுப்பர்சொனிக் விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரு கால்நடைகள் பலியாகின.

இதேவேளை இவ் இரு பகுதிகளிலும் விமானங்கள் நடத்திய தாக்குதலில் பாரிய குழிகள் பல ஏற்பட்டுள்ளன.

---

பிள்ளைகளை

பிளக்கும் பேரிரைச்சலுடன் இரு சுப்பர் சொனிக் விமானங்கள் திடீரென வட்டமிட்டன. மிகவேகமாக வட்டமிட்ட விமானத்தில் ஒன்று வட்டுக்கோட்டை பக்கமாக குண்டை வீசிவிட்டு மேலெழுந்தது.

இதையடுத்து மற்றையது திடீரென எம்மைநோக்கிவந்து கொண்டிருந்தது. நான் கத்திக்கொண்டு இரு பிள்ளைகளையும் அணைத்தவாறு வயலில் வீழ்ந்தேன். எனக்கு சற்று தள்ளி வீழ்ந்து வெடித்தகுண்டுச் சிதறல்களினால் எனது தலையில் காயம் ஏற்பட்டது. அப்போ எனது இளைய பிள்ளை என்னைக் கட்டிப்பிடித்தவாறு என் நெஞ்சிலும், மற்றைய பிள்ளை எனது இரு கால்களுக்குமிடையிலும் கிடந்தனர்.

தெய்வாதீனமாக என் பிள்ளைகள் எதுவித காயமுமின்றித் தப்பிவிட்டனர். அவசரத்தில் வீழ்ந்தபோது என் தலை வயல் வரம்பில் கிடந்ததாலேயே தலையில் காயமேற்பட்டது எனவும் தெரிவித்தார். இதே வயல் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த செல்வரட்ணம் என்பவர் தான்சுப்பர்சொனிக்கின் சத்தத்தைக்கேட்டதுமே சற்றுத் தள்ளிநின்ற மகனையும் படுக்குமாறு கூறிவிட்டு நானும் படுத்துவிட்டேன். சிலவினாடிகளில் ஒரு விமானம் என்னைநோக்கி வேகமாக வந்தது. உடனே நான் எனது கதை முடிந்துவிட்டது என நினைத்துக்கொண்டு இறுதியாக எனது மகனை பார்க்க விரும்பி தலையை நிமிர்த்தினேன். அப்போ என் தலையில் காயம் ஏற்பட்டது என்றார்.

வட்டுக்கோட்டைத் தாக்கு

---

(கொழும்பு)

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான தாக்குதலில் பலியான படையினரில் 18 படையினரின் அஸ்தி அடங்கிய கலசத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் புலிகள் வழங்கியுள்ளதாக இராணுவ அதிகாரிகள் கொழும்பில் தெரிவித்துள்ள

முன்னதாக சடலங்கள் மீள ஒப்படைக்க முடியாத நிலையில் உருக்குலைந்திருந்தமையால் அவை தகனம் செய்யப்பட்டு விட்டமையும் இராணுவத்தினரின் அஸ்தியையாவது தமக்கு தருமாறு இராணுவ அதிகாரிகள் கோரியிருந்தமையும் தெரிந்ததே.

---

# மன்னார் ஜீவா நகரில் விமானக் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் ஜீவா நகர் விவசாயப் பண்ணைமீது இரு குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசித் தாக்குதலைநடாத்தின. நேற்று முன்தினம் பிற்பகல் 4.40 மணியளவில் அப்பகுதியை வட்டமிட்ட இவ் இரண்டு குண்டுவீச்சு விமானங்களும் குண்டுத் தாக்குதலை நடாத்திவிட்டுச் சென்றன.

இத் தாக்குதலினால் அப்பகுதியில் ஏற்பட்ட சேத விபரம் தெரிய வரவில்லை.

---

தலைவர் பிரபாகரனை ஒப்படைக்க

# சிறிலங்காவை வற்புறுத்த இந்தியா விரும்பவில்லை

(டில்லி)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நாடுகடத்துமாறு இந்நேரத்தில் சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்க இந்தியா விரும்பவில்லை என இந்திய வெளியுறவு இணையமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

அண்மையில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் சிறிலங்கா அரசு தனது உள்நாட்டுப் பிரச்சினையை தீர்க்க தற்போது முயன்று வருகிறது. இந்நேரத்தில் புலிகளின் தலைவரை நாடுகடத்துமாறு அவ்வரசை இந்தியா நிர்ப்பந்திக்க விரும்பவில்லை என்றார்.

---

ஹெலி

பிரதேசப் பகுதிகளின் வான்பரப்பில் பலமுறை வட்டமிட்டு தாழப்பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றது.

இதேவேளை மாலை சுப்பர் சொனிக் விமானமும் புக்காரா விமானமும் குண்டு வீச்சு தாக்குதலை நடத்திவிட்டுச்சென்ற பின்னர் உலங்குவானூர்தியொன்று அப்பகுதியை நோட்டமிட்டுச் சென்றது.

(41

---

தலில் காயமடைந்த தேவமனோகரியை விசாரித்தபோது எனக்கு வருகிற 2ஆம் திகதி உயர்தரப் பரீட்சை தொடங்குகிறது. அதனால் அறையில் இருந்து படித்துக் கொண்டிருந்தேன். அப்போது சுப்பர் சொனிக்கின் சத்தம் கேட்டது. நான் மேசையைவிட்டு எழுமுன் கூரை உடைந்து என் மேல் வீழ்ந்தது. அதனால் தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது. இன்றைய நிலையில் என்னால் பரீட்சைக்கு தோற்ற முடியாமல் போய்விடுமோ எனப் பயமாகவுள்ளது என மிகுந்த கவலையுடன் கூறினார்.

---

# சூட்டுக்கு பலி

காங்கேசன்துறை - தெல்லிப்பளை வீதியில் வீடுபார்க்கச் சென்ற பொதுமகன் ஒருவரை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கடந்த புதனன்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் பலியானவரது பெயர் விபரங்கள் தெரியவரவில்லை.

# கண்காட்சி

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதாரப் பிரிவும், வடமாகாணப் புற்றுநோய்ச் சங்கமும் இணைந்து சுகாதாரக் கண்காட்சியை ஒழுங்கு செய்திருக்கின்றன. இக் கண்காட்சி நேற்று மாலை 3 மணிக்கு நல்லூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

---

புக்காரா

முகுந்தன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தெல்லிப்பழையிலிருந்து இடம் பெயர்ந்து சங்கரத்தை பகுதியில் வசித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 29-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:
28-5484.
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்:
24-5496.

### 30-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 10533
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-1062, 26-5071, 42-2364, 22-8855, 27-4239, 42-0962, 24-9744, 42-1494, 27-4301, 26-5178, 40-7584, 26-1349, 24-6293, 24-0521, 26-8764.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8626, 24-4726, 42-5590, 22-8075, 42-3615, 28-1262, 27-4162.

## மரண அறிவித்தல்கள்

டாக்டர்

### கதிரிப்பிள்ளை கந்தையா

காங்கேசன்துறை சந்தை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இடம்பெயர்ந்து கோண்டாவில் பாடசாலை வீதியை வதிவிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய டாக்டர் கதிரிப்பிள்ளை கந்தையா அவர்கள் 30-7-93-ம் திகதியன்று சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ் சென்ற தவச்செல்வத்தின் அன்புக்கணவரும் ராஜேஸ்வரி, இந்திராணி, தேவராணி, பாக்கியராணி, ஸ்ரீஸ்கந்தராசா, டாக்டர் உருத்திரசேனன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நற்குணநாதன், சொர்ணலிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா, வனிதாரமணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரசேகர், நிறஞ்சலா, தேவலிங்கம், ஜீவகுமார், பிரமலதா, தர்மமதன், தர்மினி, தர்சினி, தயாபரன், பிரதீபன், பார்த்தீபன், சிவரஞ்சினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [31 - 07 - 93] காலை 9-00 மணிக்கு இணுவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் உருத்திரசேனன்
(மகன்)

[5585]

### சிவசிதம்பரம் விஜயலட்சுமி

ஏறாவூர்-4ஆம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் றீகன் நகர் நாவாந்துறையை வசிப்பிடமாககொண்டவருமான திருமதி சிவசிதம்பரம் விஜயலட்சுமி[புவனேஸ்] அவர்கள் 30-07-93இல் காலமானார். அன்னார் காலஞ் சென்ற சர்மலிங்கம், செல்லம்மா அவர்களின் மூத்த மகளும், சிவசிதம்பரத்தின் அன்பு மனைவியும், கிரிதரன், செல்வகுமார், சசிகலா, தியாகராசா, நிஷாந்தி ஆகியோரின் அருமைத் தாயாரும், ராசரட்ணம், செல்வராசா, பத்மநாதன் (ராஜு), ரவிச்சந்திரன், இதயராணி, செல்வராணி [கனடா], ரவிக்குமர் ஆகியோரின் சகோதரியும், வெங்கடாசலம், செல்லத்துரை, பேரின்பராசா, அருணாசலம், சுந்தரம் (பிரான்ஸ்), தவமணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 31-07-93 சனிக்கிழமை (இன்று) பிற்பகல்

# தென்லெபனான் பகுதிக்கு இஸ்ரேலியப்படை நகர்வு


## மூன்றுஇலட்சம் மக்கள் வெளியேற்றம்

(பெய்ரூட்)

லெபனான் கிராமங்கள் மீது ஆறாவது நாளாக இஸ்ரேல் கடும் விமான, பீரங்கித் தாக்குதலை நடத்திவரும் அதே சமயம் தென் லெபனானுக்கு இஸ்ரேலிய படையினரும் இராணுவ வாகனங்களும் அனுபபப்பட்டுள்ளன. தாக்குதலை நிறுத்துமாறு அமெரிக்கா வலியுறுத்திய போதிலும் இஸ்ரேல் தனது படைகளை தென் லெபனானுக்கு அனுப்பியுள்ளது.

தென் லெபனானில் பாதுகாப்பு வலயமாக இஸ்ரேல் பிரகடனப்படுத்திய பகுதிக்கு அதிக டாங்கிகளும், கவசவாகனங்களுடனான படைகளும் அனுபபப்பட்டுள்ளன. 1982 இல லெபனானை இஸ்ரேல் ஆக்கிரமித்தபின் அது நடத்தும்பெரும்படைநகர்த்தல் இதுவாகும். தென் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கெரில்லாக்களை விரட்டுவதே இந் நடவடிக்கையின் நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் நேற்றும் வட இஸ்ரேல் மீது ரொக்கட் தாக்குதலை நடத்தினர்.

அகதிகள்பிரச்சினையைதாம் நடத்தும் தாக்குதல்மூலம் ஏற்படுத்தி லெபனான் அரசு ஹிஸ்புல்லா கெரில்லாக்கள்மீதுநிர்ப்பந்தம் ஏற்படுத்தவே இஸ்ரேல் குடிமக்கள் இருப்பிடங்கள்மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இது எதிர்பார்த்ததைவிட வெற்றியளித்துள்ளதாக இஸ்ரேலிய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேலிய தாக்குதலுக்கு அஞ்சி மூன்று லட்சம் லெபனான் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.



விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 33 போர்க் கைதிகளும் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா அரசைக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதை மேலுள்ள படத்தில் காணலாம்.

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்க 30ஆவது ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் எஸ். எஸ். நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கிராம உத்தியோகஸ்தர் தரம் ஒன்றிற்குச் சேவை மூப்பு அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தினரை பதவி உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட

## தபால் பொதிகள் குமணவில் நேற்று ஏற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான தபாலகத்திலும், வடமராட்சி தபாலகத்திலும் சேர்ந்துள்ள வெளியூர் தபால்கள் குமண கப்பலில் நேற்று ஏற்றப்பட்டன.

இந்தத் தபால் பொதிகள் அனைத்தும் குமண கப்பலில் திருக்கோணமலை வரை செல்லும் என்றும் அங்கிருந்து கொழும்பிற்கு புகையிரதத்திலோ அல்லது வேறு வாகனங்களிலோ எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், வடபகுதியிலிருந்து அனுப்பி வைக்கப்படும் தபால் பொதிகள் சீராக கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சேர்க்கப்படுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தபால் பொதிகள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட கூலிப் பணம் பெருமளவில் தபால்

### வீரச்சாவு

மணியளவில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் பெண்

பூநகரி கோட்டை தகர்ப்பில்

## வீரச்சாவடைந்த மாவீரர் நினைவாக எழுச்சிகுடியிருப்பு

பூநகரி ஒல்லாந்தர் கோட்டை தகர்ப்பில் வீரச்சாவடைந்த மேஜர் அசோக் உட்பட ஏழு மாவீரர்களையும் நினைவு கூரும் முகமாக, மன்னார் முழங்காவிலில்கடந்த செவ்வாயன்று எழுச்சிக் குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டது இக்கிராமம் யாழ்ப்பாணம் தீவுப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களைக் குடியமர்த்தி ஆரம்பிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் காலை மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியும் பின்னர் முழங்காவில், பூநகரி கொத்தணிகளுக்கிடையிலான சிநேகபூர்வ தாச்சிப்போட்டி, வலைபந்தாட்டப் போட்டி என்பனவும் இடம்பெற்றன.

மாலை 6 மணியளவில் நடந்த எழுச்சிக்கிராம திறப்பு விழாவில் மாவட்டத் தளபதி கதிர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார். தொடர்ந்து சிறப்புத் தளபதி ஜான் நாடாவை வெட்டி எழுச்சிக் கிராமத்தைத் திறந்து வைத்தார். ஏழு மாவீரர்களினதும் உருவப் படங்களை பொருண்மிய மேம்பாட்டு கழக துணைப் பொறுப்பாளர் திலக் திரை நீக்கம் செய்து வைத்த...

இரவு 8. 30 மணிய... மாவீரர் பெற்றோர் ... சாலை மாணவர்கள் ... முழங்க மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். ... தான மங்கள விளக்கை... மாவட்ட பொருண்மிய... பாட்டுக் கழகப் ... பாளர் எம். ஜி. ஆர் அவர்... ஏற்றிவைக்க உருவப்பட... களுக்கு பெற்றோர் விளக்... கேற்றி வைத்தனர். இதனை... தொடர்ந்து வீரவணக்க... கூட்டம் நடைபெற்றது. தலைமைஉரையை திரு. சாம்... ஆற்றினார் அடுத்து, பொருண்மிய மேம்பாட்டுக் கழக சார்... பில் கலியுகவரதன், இ... நொச்சி விவசாய பல்கலை... கழக உறுப்பினர் ஆகியோரு... உரையாற்றினர்.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கணேஸ் அவர்களும் உரையாற்றினார்... கலை நிகழ்ச்சிகளும் இட... பெற்றன. விளையாட்டு... போட்டிகளில் வெற்றிபெற்... வர்களுக்கு தங்கப்பதக்கமு... பரிசுகளும் வழங்கப்பட்டன.

## வட்டுக்கோட்டை பகுதியி... இளைஞர்பலி; நால்வர்காய...

சிறிலங்கா விமானப்படையின் சுப்பர் சொனிக் புக்காரா விமானங்கள் நேற்று மாலை வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள மாவடி கந்தசுவாமி கோவில் முன்பாக மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலினால் இளைஞர் ஒருவர் பலியானதுடன் நால்வர்காயமடைந்தனர்.

மேற்படி குண்டு வீச்சுகளினால்தற்பெருநாதன்முகுந்தன் (வயது 23) தெல்லிப்பழை யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்

மேலும் லலிதாம்பாள் மகாதேவன் (வயது 50) மற்றும் இவரது மகள் தேவமனோகரி (வயது 19) சுமித்திரா கிருஷ்ணமூர்த்தி (வயது 16). கொட்டைகாடு சி சர்வாம்பிகை (வயது 47) ஆகியோர் படுகாயமடைந்தனர் இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் தேவமனோகரி, சுமித்திரா இருவரும் யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

(41,(ச), (பா)

## சித்தன்கேணிப் பகுதியில் காயமடைந்தோர் விபரம்

(நமது நிருபர்)

சித்தன்கேணிப்பகுதி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது சிறிலங்காவின் சுப்பர்சொனிக் விமானம் நடத்திய குண்டுவீச்சினால் ஐவர் காயமடைந்தனர். மேற்படி தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

மலர்தேவி வெற்றிவேல் [வயது 31] சங்கானை, செல்லையா செல்வரட்ணம் [64] பன்னாலை, இவரது மக... செ. சிவகுமார் [25] ஆ... யோர் படுகாயம் அடைந்... நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்... க்காக அனுமதிக்கப்பட்டு... ளனர்.

க. பிரேமதாசன் [17] ச... கானை, நாகேஸ்வரி கம... நாதன் [48] சித்தன்கே... ஆகியோர் சிகிச்சை பெற்... பின் வீடு திரும்பினர்.

[41] [ச] [பா]

## எம்மை நோக்கி இரு...

[5585]

டாக்டர் உருத்திரசேனன்
(மகன்)

## சிவசிதம்பரம் விஜயலட்சுமி

ஏறாவூர்-4ஆம் குறிச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் றீகன் நகர் நாவாந்துறையை வசிப்பிடமாககொண்டவருமான திருமதி சிவசிதம்பரம் விஜயலட்சுமி[புவனேஸ்] அவர்கள் 30-07-93இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சர்மலிங்கம், செல்லம்மா அவர்களின் மூத்த மகளும், சிவசிதம்பரத்தின் அன்பு மனைவியும், கிரிதரன், செல்வகுமார், சசிகலா, தியாகராசா, நிஷாந்தி ஆகியோரின் அருமைத் தாயாரும், ராசரட்ணம், செல்வராசா, பத்மநாதன் (ராஜு), ரவிச்சந்திரன், இதயராணி, செல்வராணி [கடா], ரவிக்குமார் ஆகியோரின் சகோதரியும், வெங்கடாசலம், செல்லத்துரை, பேரின்பராசா, அருணாசலம், சுந்தரம் (பிரான்ஸ்), தவமணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 31-07-93 சனிக்கிழமை [இன்று] பிற்பகல் 3-00 மணிக்கு கோம்பையன்மணல் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
S.சிவசிதம்பரம்

(5589)

## பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்க 30ஆவது ஆண்டு வருடாந்த பொதுக் கூட்டம் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் எஸ். எஸ். நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ் அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கிராம உத்தியோகஸ்தர் தரம் ஒன்றிற்குச் சேவை மூப்பு அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தினரை பதவி உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களைக் கேட்டுக் கொள்வதென்றும்,

மாவட்டத்தில் தற்போது தனித்தனியே இயங்கிக்கொண்டிருக்கும் கிராமசேவையாளர் சங்கங்கள் இணைந்து ஒரே சங்கமாகச் செயற்பட வேண்டும் என்ற தீர்மானங்கள் முன்மொழியப்படவுள்ளன.

## தபால் பொதிகள் குமணவில் நேற்று ஏற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான தபாலகத்திலும், வடமராட்சி தபாலகத்திலும் சேர்ந்துள்ள வெளியூர் தபால்கள் குமண கப்பலில் நேற்று ஏற்றப்பட்டன.

இந்தத் தபால் பொதிகள் அனைத்தும் குமண கப்பலில் திருக்கோணமலை வரை செல்லும் என்றும் அங்கிருந்து கொழும்பிற்கு புகையிரதத்திலோ அல்லது வேறு வாகனங்களிலோ எடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், வடபகுதியிலிருந்து அனுப்பி வைக்கப்படும் தபால் பொதிகள் சீராக கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சேர்க்கப்படுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தபால் பொதிகள் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்ட கூலிப் பணம் பெருமளவில் தபால் திணைக்களத்தால் கப்பல் கொம்பனிக்கு வழங்கப்பட வேண்டியுள்ளமை தெரிந்ததே.

இதன் காரணமாக கப்பல் ஊடாக தபால்களை அனுப்பி வைப்பதற்கு மக்கள் பின் நிற்கிறார்கள். (தி)

### வீரச்சாவு

மணிபளவில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் பெண் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த கப்டன் வதனி (இரத்தினம்சியாமளா, இரணைமடுச்சந்தி, கிளிநொச்சி) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சித்தன்கேணிப் பகுதியில் காயமடைந்தோர் விபரம்

(நமது நிருபர்)

சித்தன்கேணிப்பகுதி வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது சிறிலங்காவின் சுப்பர்சொனிக் விமானம் நடத்திய குண்டுவீச்சினால் ஐவர் காயமடைந்தனர். மேற்படி தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

மலர்தேவி வெற்றிவேல் [வயது 31] சங்கானை, செல்லையா செல்வரட்ணம் [64] பன்னாலை, இவரது மக[ன்] செ. சிவகுமார் [25] ஆ[கி]யோர் படுகாயம் அடைந்[த] நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்[சை]க்காக அனுமதிக்கப்பட்டு[ள்]ளனர்.

க. பிரேமதாசன் [17] ச[ங்]கானை, நாகேஸ்வரி கம[லநா]தன் [48] சித்தன்கே[ணி] ஆகியோர் சிகிச்சை பெற்[ற] பின் வீடு திரும்பினர்.

[41] [ச] [பா]

## எம்மை நோக்கி இரு குண்டுகள் வந்தன

### குண்டு வீச்சில் தப்பியவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

''சுப்பர் சொனிக் விமானம் இரைச்சலுடன் வட்டமிட்ட போது நாங்கள் வயலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது எம்மை நோக்கி இரண்டு குண்டுகள் வருதைக் கண்டோம் நாங்க[ள்] என்ன செய்வதென்று தெ[ரி]யாது திகைத்திருந்தவே[ளை] குண்டு எங்களை தாண்டி

(5ஆம் பக்கம் பார்க்க)


# A/L94 துரித மீட்டல் பாடத்திட்டம் அலகுரீதியானவினாவிடை

# வடமராட்சியில் ஆரம்பமாகிவிட்டன

# முற்றான பாடத்திட்டம் A/L95

- பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறும் முதல் மூன்று மாணவரிற்கு இலவசக் கல்வி.
- வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவரிற்கு, சலுகைகள் உண்டு.
- திறமை, ஒழுக்க அடிப்படையில் புலமைப் பரிசில்கள்
- வகுப்புகளிற்கு அனுமதிக்கப்படுவதற்கு குறிப்பிட்ட வெற்றிடங்களே உண்டு.

மாணவர்களிற்கு விசேட ஊக்குவிப்புகள்

பொருளியல் - II
வரதராஜன்
செவ்வாய் காலை 9. 00

பொருளியல் - I
கருணாமூர்த்தி
செவ்வாய், வியாழன்
மாலை 3. 30

இந்து நாகரிகம்
குமுதினி
செவ்வாய், வியாழன்
மாலை 3. 30

அளவையியல்
நவம்
சனி, ஞாயிறு காலை 7. 00

இந்து சமயம்
நவசிவாயகுருக்கள்
சனி, ஞாயிறு மாலை 3.30

COLLEGE OF

NEPTUNES

பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி.

தமிழ் - இலக்கியம்
கணேசலிங்கம்
வியாழன் காலை 9. 00

இரசாயனம்
சதீஸ்
ஞாயிறு
மாலை 3. 00

தமிழ் - இலக்கணம்
நவம்
சனி, ஞாயிறு
காலை 9. 00

வர்த்தகம்
நாதகோபாலன்
சனி, ஞாயிறுகாலை 10.30

கணக்கியல்
பிரபாகரன்
சனி, ஞாயிறு மாலை 3 30

O/L பகல்நேர வகுப்புக்கள் | 6,7,8,9,10ஆண்டு வகுப்புக்கள் | 01.08.1993 ஆரம்பம் | இசைக்கருவிகள் வகுப்புக்கள் | A/L நாடகமும், அரங்கியலும்

5588


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' மணிமனையில் 1993-ம்ஆண்டு ஜூலை மாதம் 31ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.